பக்கங்கள் 15+4

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 14 புதன்கிழமை 27.03.2024 அதிர்வு 240

## கொள்ளையர் குழுவில் ஒருவர் சுட்டுக்கொலை

### இருவர் தப்பியோட்டம்

நாரம்மல – ரன்முத்துகல பகுதியில் கொள்ளையர்கள் குழு மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

04 ▶



# ஜனநாயகத்தை முழுமையாக பாதுகாத்த ஒரே நாடு இலங்கை

## முதலாவது தேசிய மாணவர் நாடாளுமன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ரணில் தெரிவிப்பு



ஆளும் கட்சியால் எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் ஜனநாயகத்தை முழுமையாகப் பாதுகாக்கும் ஒரேயொரு ஆசியா நாடு இலங்கை மட்டுமே என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்தோடு சகலருக்கும் தமது கருத்துக்களை வெளியிட வாய்ப்புள்ள ஜனநாயக நாடாளுமன்ற முறையைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

03 ▶

# வடக்கில் குற்றச் செயல்கள் முற்றாகக் கட்டுக்குள் வரும்

## அண்மையில் புதிதாகப் பதவியேற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



வடக்கு மாகாணத்தில் குற்றச் செயல்கள் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டு, பொது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சி.ஏ.தனபால தெரிவித்தார்.

அண்மையில் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்றிருந்த திலக் சி.ஏ.தனபால வடக்கின் நிலைமை தொடர்பில் ஊடகங்களிடம்

04 ▶



# கொட்டும் மழையிலும் 3ஆவது நாளாக கல்முனையில் தொடரும் ஆர்ப்பாட்டம்





(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான நிர்வாக அடாவடித்தனத்துக்கு எதிராக நீதி கோரி நடத்தும் மக்கள் போராட்டம் இன்று மூன்றாவது நாளாகவும் கொட்டும் மழையிலும் ஆக்ரோஷமாகத் தொடர்கின்றது.

"அரசியல்வாதிகளே, அரச அதிகாரிகளே, அமைச்சின் செயலாளரே உங்கள் பதில் என்ன?" என்று அங்கு குழுமியிருந்த மக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களுமாக பிரதேச செயலத்தின் முன்னால் வீதி அருகே அமர்ந்து அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள்.

நேற்று மற்றும் நேற்றுமுன் தினத்தை விட இன்று அதிகளவான பொதுமக்கள் அங்கு கூடத் தொடங்கினர். பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

"கல்முனை வடக்கு பிரதேச தமிழ் மக்கள் அரச சேவைகளைப் பெறும் அடிப்படை உரிமைகள் தொடர்ச்சியாக திட்டமிடப்பட்டு மாற்றின அரசியல்வாதிகளால் பறிக்கப்பட்டு வருகின்றமை நாடறிந்த விடயம்.

கல்முனை வடக்கு பிரதேச செயல-கத்தின் அதிகாரங்கள் 30 வருடங்களாக தடுக்கப்பட்டு வருவதுடன் அண்மை-க்காலமாக இருக்கும் அதிகாரங்களும் பறிக்கப்பட்டும் வருகின்றன.

பறிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கும் இயங்கிக் கொண்டிருக்கின்ற கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கான அரச அதிகாரங்களைப் பெற்று மக்களுக்கான அரச சேவையைப் பெறுவதற்கு முடியாமல் கடந்த 30 வருடங்களாகத் தவித்துக் கொண்டிருக்கும் இப் பிரதேச மக்கள் நேற்றுமுன்தினம் அமைதிப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இன்று மூன்றாவது நாளாகவும் போராட்டம் தொடர்கின்றது. பெருமளவான பொதுமக்கள் பங்குபற்றி வருகின்றனர்.

# ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும்



## ஐ.தே.க. பொதுச்செயலாளர் தெரிவிப்பு

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் பிரகாரமே செயற்படுவார். எனவே, முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும்." – என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"கிரிக்கெட் விளையாட்டில் நடுவர்களிடம் ஆட்டமிழப்பா? இல்லையா? என வீரர்கள் வினவலாம். அதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது. ஆனால், போட்டி விதிமுறைகளுக்கு அமையவே நடுவரின் தீர்ப்பு அமையும்.

அதுபோலவே முன்கூட்டியே பொதுத்தேர்தலை நடத்துமாறு சிலர் கோரலாம். எனினும், ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரமே செயற்படுவார்.

நாடு முன்னேற வேண்டுமெனில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண்டும்." – என்றார்.

# ஜனநாயகத்தை முழுமையாக பாதுகாத்த ஒரே நாடு இலங்கை

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இலங்கையின் முதலாவது தேசிய மாணவர் நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் 9 மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் 100 வலயங்களில் நிறுவப்பட்ட அனைத்து வலய மாணவர் நாடாளுமன்றங்களிலிருந்தும் அதிக வாக்குகளைப் பெற்ற தலா இரு உறுப்பினர்கள் தேசிய மாணவர் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

கல்வி அமைச்சின் இணைப்பாடவிதான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக் கிளையின் ஒத்துழைப்புடன் தேர்தல்கள் ஆணைக்குழுவால் அண்மையில் நடத்தப்பட்ட தேர்தலில் தேசிய மாணவர் நாடாளுமன்ற சபாநாயகர், பிரதமர், பிரதி சபாநாயகர் மற்றும் 10 அமைச்சர்கள் மற்றும் 10 பிரதி அமைச்சர்களும் நியமிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கு அமைய ஜனாதிபதி அலுவலகம் உட்பட கொழும்பில் உள்ள முக்கிய இடங்களைப் பார்வையிடும் வாய்ப்பு பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து வெளியிடப்பட்ட 'பிபிதுனு சிசு மெதி சபய' நூலை ஜனாதிபதி செயலக உதவிப் பணிப்பாளர் மேஜர் நதீக்க தங்கொல்ல ஜனாதிபதிக்கு கையளித்தார்.

மேலும் இச்சந்தர்ப்பத்தை முன்னிட்டு கல்வி அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேராவினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நினைவுப் பரிசில் ஒன்றும் வழங்கப்பட்டது.

தேசிய மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாட்டின் அரசியல் தொடர்பான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்க ஜனாதிபதி சந்தர்ப்பம் வழங்கியதுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் இடத்துக்கு வருகை தருவதற்கும் ஜனாதிபதி சந்தர்ப்பம் வழங்கியிருந்தார்.

தேசிய மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சான்றிதழ்களை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க வழங்கி வைத்தார்.

தேசிய மாணவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:-

"இலங்கையின் முதலாவது தேசிய மாணவர் நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் பங்கேற்கும் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஜனநாயகத்தை முழுமையாகப் பாதுகாத்த ஒரே நாடு இலங்கை என்பதால் எமது நாடு விசேடமான ஒரு நாடாகும். 1833ஆம் ஆண்டில் எமது நாட்டின் சட்டமன்றம் நிறுவப்பட்டது. அன்று வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. ஆளுநரால் இலங்கையர்கள் சிலர் இதற்கு நியமிக்கப்பட்டனர்.

1912 இல் இலங்கையர் ஒருவரை உறுப்பினராகத் தெரிவு செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை. சொத்து மற்றும் கல்வி அடிப்படையில் சுமார் ஐயாயிரம் பேருக்கு வாக்களிக்க வாய்ப்பு கிடைத்தது.

பின்னர் 1931 இல் இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை கிடைத்தது. அதன்படி, 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் வாக்களிக்கும் உரிமையைப் பெற்ற ஆசியாவின் முதல் நாடாக நாம் திகழ்ந்தோம். அன்று முதல் எதிர்க்கட்சிகளுக்கு ஆளும் கட்சியினால் தடை விதிக்கப்படாத ஒரே ஆசிய நாடாக இலங்கை காணப்படுகின்றது. 1931 இற்குப் பிறகு, ஏனைய அனைத்து நாடுகளிலும் எதிர்க்கட்சிகள் ஜனநாயகத்தை இழந்துள்ளன. எம்மை எவ்வளவுதான் விமர்சித்தாலும், குற்றம் சாட்டினாலும், பல குறைபாடுகளுக்கு மத்தியிலும் ஜனநாயகத்தை பாதுகாத்து வருகிறோம்.

பின்னர் டொனமோர் முறைமையின் கீழ் எங்களுக்கு ஏழு அமைச்சுப் பதவிகள் கிடைத்தன. மூன்று அமைச்சுப் பொறுப்புகளை வெள்ளையர்கள் வகித்தனர். பின்னர் அதற்கும் இலங்கையர்கள் நியமிக்கப்பட்டனர். இச்சபையினால் ஏழு குழுக்கள் நியமிக்கப்பட்டு அவற்றிலிருந்து ஏழு தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் அமைச்சர்களாக பணியாற்றினர். ஏனென்றால் அப்போது அரசியல் கட்சிகள் இருக்கவில்லை. உலக மகா யுத்தத்தின் போது யுத்த நடவடிக்கைகள் தவிர அனைத்து நடவடிக்கைகளும் இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டன. ஏனெனில் அப்போது இலங்கை பிரித்தானியா, அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளுடன் இணைந்து செயற்பட்டது.

அதன் பிறகு சோல்பரி அரசியலமைப்பின் படி சுதந்திரம் கிடைத்தது. நீங்கள் இருக்கும் கட்டடம் அரசியல் நிர்ணய சபையின் கூட்டத்துக்காகக் கட்டப்பட்டது. பின்னர் இந்தச் சபையில் டொனமோர் ஆணைக்குழு நிறுவப்பட்டது. பின்னர் இது மக்கள் பிரதிநிதிகள் சபை மீண்டும் செயற்பட்டது. செனட் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் சபை ஆகியவையும் இந்த இடத்தில் செயற்பட்டன.

1972 இல் இலங்கை குடியரசாக மாறியபோது, இது தேசிய அரச சபையாகியது. 1977இல் தேசிய அரச சபைக்கு நான் தெரிவானேன். தேசிய அரச சபையை பிரதிநிதித்துவப்படுத்திய நான்கு பேர் இன்று நாடாளுமன்றத்தில் உள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் 1970 இலும் 1977ஆம் ஆண்டில் ஆர். சம்பந்தனும் நானும் இங்கு வந்தோம். 1977 இல், நாடு நிறைவேற்று ஜனாதிபதி முறைக்குள் பிரவேசித்தது. 1982 இல் நாங்கள் புதிய நாடாளுமன்றத்துக்குச் சென்ற பிறகு, இந்தக் கட்டடம் ஜனாதிபதி அலுவலகமாக மாறியது.

இந்தப் பின்னணியில் உலகப் போர்கள், உள்நாட்டுப் போர் நடந்தாலும், ஜனநாயகத்தையும், அரசின் மற்றும் எதிர்க்கட்சிகளின் செயற்பாட்டையும் நாம் ஒருபோதும் இல்லாமலாக்கவில்லை. இந்த முறையால், அனைவரின் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. இந்த நாடாளுமன்ற அமைப்பை நாம் பாதுகாக்க வேண்டும்.

முழு ஆசியாவுக்கும் மற்றும் ஆப்பிரிக்காவில் இரண்டு நாடுகள் மாத்திரமே இதைச் செய்துள்ளன. ஒன்று இலங்கை மற்றொன்று மொரிஷியஸ். அப்படியானால், நாம் அனைவரும் ஒன்றிணைந்து இதைப் பாதுகாக்க வேண்டும். பிரிட்டன், அயர்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் சுவீடன் மட்டுமே ஐரோப்பாவில் ஜனநாயகத்தைப் பேணின. ஜனநாயகத்தைப் பேணுவது பற்றி நமக்கு அறிவுரை கூறும் ஏனைய அனைத்து நாடுகளும் அடால்ஃப் ஹிட்லரின் ஆட்சியின் கீழ் வந்தன.

இந்தப் பொறிமுறையை எவ்வாறு பேணுவது என்பதைக் கற்றுக்கொள்ள இங்கு இருக்கும் நீங்கள் ஆர்வமாக இருக்கலாம். மேலும், இங்கு அரசியலில் ஆர்வம் உள்ளவர்களும் இருக்கலாம். அதற்குத் தேசிய மாணவர் நாடாளுமன்றம் அடிப்படையாக அமையும் என நம்புகின்றேன்." - என்றார்.

இலங்கை நாடாளுமன்றத்தின் பணிக்குழாம் பிரதானியும் பிரதிப் பொதுச் செயலாளருமான சமிந்த குலரத்ன, இலங்கை நாடாளுமன்றத்தின் உதவிப் பொதுச் செயலாளர் ஹன்ச அபேரத்ன, பிரதமரின் மேலதிகச் செயலாளர் ஹர்ஷ விஜேவர்தன, தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் மேலதிக செயலாளர்கள், மாகாண செயலாளர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு தொடர்ச்சியாக ஆதரவு வழங்கும் சீனா

## அந்நாட்டுப் பிரதமர் உறுதி



இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்குத் தொடர்ச்சியாக ஆதரவளிப்பதாக சீனா மீண்டும் உறுதியளித்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் சீனப் பிரதமருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் சீனா தொடர்ச்சியாக ஆதரவளிக்கும் என்று சீனப் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

பொருளாதாரப் பின்னடைவின் பின்னர் இலங்கை பெற்றுள்ள முன்னேற்றத்தையும் சீனப் பிரதமர் இதன்போது பாராட்டியுள்ளார்.

இதனிடையே, சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் தினேஷ் குணவர்தன இன்று அந்நாட்டின் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை, இலங்கைப் பிரதமரின் விஜயத்துக்கு இணையாக சீனா மற்றும் இலங்கை இடையில் நேற்று 9 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

# கைதான 36 இந்திய மீனவர்களில் மூன்று பேருக்குச் சிறைத்தண்டனை

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய 36 இந்திய மீனவர்களில் மூவருக்குச் சிறைத்தண்டனை விதித்து ஊர்காவற்றுறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

யாழ்ப்பாணம் கடற்பரப்புக்குள் கடந்த 15 ஆம் திகதி ஒரு படகில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட காரைக்கால் மீனவர்களுடன் கடந்த 17 ஆம் திகதி இரண்டு படகுகளில் எல்லை தாண்டிய 21 இராமேஸ்வரம் பகுதி மீனவர்களுமாக மொத்தம் 36 மீனவர்களின் வழக்கு இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மூவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மூன்று படகுகளில் இரண்டு படகுகளின் படகோட்டிகளுக்கும் தலா 6 மாத சிறைத் தண்டனையும், கடந்த ஆண்டும் எல்லை தாண்டிய சமயம் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்ட ஒரு மீனவர் மீண்டும் எல்லை தாண்டி வந்தமையால் அந்த மீனவருக்கு ஓர் ஆண்டு சிறைத்தண்டணையும் விதிக்கப்பட்டது.

இதேநேரம் மூன்றாவது படகின் உரிமையாளர் படகில் இருந்தமையால் படகு அரசுடமையாக்கப்பட்டு உரிமையாளர் உட்பட எஞ்சிய 33 மீனவர்களுக்கும் 5 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 18 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இதற்கமைய ஏற்கனவே 8 இந்திய மீனவர்கள் சிறையில் உள்ள நிலையில் தற்போதைய 3 பேருடன் 11 இந்திய மீனவர்கள் சிறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வடக்கில்...**

கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பொறுப்பேற்றிருப்பது மகிழ்ச்சியே. வடக்கில் ஏற்கனவே பணியாற்றியவன் என்ற அடிப்படையில் இங்குள்ள பிரச்சினைகள் பலவற்றை அனுபவ ரீதியாகவும் உணர்வுபூர்வமாகவும் நான் அறிவேன். ஆதலால், வடக்கு மாகாண மக்களுடன் இணைந்து பணியாற்றுவதில் எனக்கு எந்தச் சிரமமும் இருக்கப் போவதில்லை.

வடக்கு மாகாணத்தில் வீதிப் போக்குவரத்தில் உள்ள குறைபாடுகள் விரைவில் நிவர்த்தி செய்யப்பட்டு மேம்பட்ட ரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கப்படும். போதைப்பொருள் பிரச்சினைகள், சமூகத்தில் புரையோடிப் போயுள்ள இதர குற்றச் செயல்கள் விரைவில் கட்டுப்படுத்தப்பட்டு பொதுமக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கு முடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் விரைவில் மேற்கொள்வேன்." – என்றார்.

---

**கொள்ளையர்...**

இரு கொள்ளையர்கள் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆப்பிள் ஐபோன் விற்பனை தொடர்பில் பத்திரிகையில் வெளியிட்ட விளம்பரங்களை அடுத்து கையடக்கத் தொலைபேசிகளைக் கொள்வனவு செய்ய வந்தவர்களிடம் இருந்து கொள்ளையர்கள் பணத்தைத் திருட முயற்சித்துள்ளனர்.

குறித்த விளம்பரத்தைப் பார்த்து ருவன்வெல்ல பகுதிக்கு கையடக்கத் தொலைபேசிகளைக் கொள்வனவு செய்ய வந்தவர்களுக்கு விளம்பரம் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்ட நிலையில், பொலிஸாருக்கு அறிவித்து பொலிஸ் அதிகாரிகளுடன் கொள்ளையர்களைச் சந்திக்கச் சென்றுள்ளனர்.

நாரம்மல பகுதியிலுள்ள இடத்துக்கு வருமாறு கொள்ளையர்கள் தெரிவித்ததோடு, குறித்த இடத்தை அடைந்ததும் கொள்ளையர்கள் அவர்களது காரை கூரிய ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

,jidaLj;J nghyp]; cj;jp Nahfj;ju;fSld; Vw;gl;l iffyg; gpd;NghJ> nghyp]; mjpfhup xUtu; nfhs;isau;fis Nehf;fpj; Jg; ghf;fpR+l;il elj;jpAs;shu;.

mjpy; xU nfhs;isau; fhakile;J itj;jparhiyapy; mDkjpf;fg;gl;l gpd;du; capup oe;Js;shu;. ,uz;L nfhs;isau;fs; jg;gpr; nrd;Ws;sdu;.

,NjNtis> ifalf;fj; njhiy Ngrpfisf; nfhs;tdT nra;a te;j ,Utu; nfhs;isau;fspd; jhf;F jyhy; fhakile;J FUehfy; Nghjdh itj;jparhiyapy; Nru;f;fg;gl;Ls;sdu;.

rk;gtk; njhlu;ghd Nkyjpf tprhuizfis ehuk;ky nghyp]hu; Nkw;nfhz;L tUfpd;wdu;.




# தாக்குதலாளிகள் கைது செய்யப்படாது விட்டால் திருக்கோவில் ஆஸ்பத்திரி நிரந்தரமாக மூடப்படும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

( வி.ரி. சகாதேவராஜா)

தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படாவிடின் திருக்கோவில் வைத்தியசாலையை நிரந்தரமாக மூட நேரிடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

திருக்கோவில் ஆதார வைத்திய சாலை மீது ஆர்ப்பாட்டம் நடத்தி தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களைப் பொலிஸார் கைது செய்யாவிடின் குறித்த வைத்தியசாலை நிரந்தரமாக மூடப்பட நேரிடலாம்.

இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் ஊடகக் குழு உறுப்பினர் டாக்டர் அன்பாஸ்பாறூக் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் வைத்தியர்களுக்கு போதுமான ஊதியம் பாதுகாப்பின்மை காரணமாக பலர் வெளிநாடு சென்று கொண்டிருக்கின்றார்கள் .

இந்த சூழலில் திருக்கோவிலில்



கடந்த 11 ஆம் திகதி இடம் பெற்ற சம்பவம் ஒன்றில் 17 வயது மரதனோட்ட மாணவன் பரிதாபமாக உயிரிழந்தார்.

அதனையடுத்து சீருடை அணிந்த மாணவர்கள் உள்ளிட்ட மக்கள் குழுவினர் ஆர்ப்பாட்டத்தை நடத்தியதோடு வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்தினார்கள். பாடசாலை நேரத்தில் மாணவர்கள் இவ்வாறு நடந்து கொள்ளலாமா? பொது மக்கள் பின்னால் அரசியல்வாதிகள் இருந்திருக்கின்றார்கள் என்று தெரிகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று நாங்கள் எமது வைத்தியர்களை விலக்கி தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொண்டு வந்தோம் . இதனால் கடந்த இரு வாரங்களாக வைத்திய சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

ஆனால் பொலிஸார் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்வதில் ஒருவித அசமந்த போக்கு இழுத்தடிப்பு செய்கிறது. இன்னமும் அங்கு பாதுகாப்பின்மை நிலவுகிறது.

இந்த நிலை தொடர்ந்தால் இந்த வைத்தியசாலை நிரந்தரமாக மூடப்படக் கூடிய அபாயமும் இருக்கின்றது. இதனால் அப்பாவிப் பொது மக்களே பாதிக்கப்படுவார்கள் என்பதை நாங்கள் அறிவோம் .

இருந்த பொழுதிலும் எமது பாதுகாப்புக் கருதி அனைவரையும் கைது செய்ய வேண்டும்.

இந்த நிலையிலேயே கல்முனை பிராந்திய சுகாதார வைத்தியசாலை உட்பட்ட வைத்தியசாலைகளில் அடையாள வேலை நிறுத்த போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கின்றோம். - என்றார்.

# கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு கல்முனையில் பலத்த பாதுகாப்பு!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் சென்ற பொலிஸ் குழு கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து தேவாலயங்களின் பொறுப்பாளர்களையும் சந்தித்து வருகிறது.தேவையான பாதுகாப்பையும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இது தவிர கல்முனை பிராந்தியத்தில் இராணுவம், விசேட அதிரடிப்படை புலனாய்வு பிரிவினரின் நடவடிக்கையையும் என்றும் இல்லாதவாறு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

புனித வெள்ளிக்கிழமையான 29 ஆம் திகதியும் உயிர்த்த ஞாயிறு தினமான 31 ஆம் திகதியும் நாட்டிலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் வரும் யாத்திரீகர்கள் மற்றும் அவர்களது பயணப் பொதிகளை சோதனையிடும் விசேட வேலைத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடி நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அனைத்துப் பொலிஸ் பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்படி, சமூக பொலிஸ் குழுக்கள், அந்தந்தத் தேவாலயங்களின் பாதிரிமார்கள் மற்றும் அமைப்பாளர்களுடன் இணைந்து வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபர் சகல பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# விசித்திரமான அணுகுமுறை

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு பிரச்சினைகள் அண்மைய வாரங்களில் வெளிவந்தன.

ஆனால் அவற்றில் ஒன்றைப் பற்றித்தான் தேசிய மட்டத்தில் அதிகம் அலட்டிக்கொள்ளப்பட்டது. மற்றது குறித்து பொதுமக்களுடன், பொது அமைப்புகளும் சரி, அரசியல் கட்சிகளும் கூட, அதிகம் ஈடுபாடு காட்டாமல் அதனை புறமொதுக்கி விட்டன. இந்த உதாசீனம் ஏன் என்பது புரியவில்லை.

முதலாவது - 2022 ஆம் ஆண்டு 'அறகலய' போராட்டம் நடைபெற்ற சமயம் கட்டவிழ்ந்த விடயங்கள் தொடர்பானது.

மற்றையது - 2019 ஏப்ரலில் ஈஸ்டர் ஞயிறு தொடர் குண்டு தாக்குதல் சம்பந்தமானது.

'அறகலய' போராட்டத்தின் உச்சக் கட்டத்தில், மக்கள் எழுச்சிக்கு முகம் கொடுக்க முடியாமல் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியை விட்டு வெளிநாட்டுக்குத் 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று ஓடித்தப்பிய வேளையில் இடம் பெற்ற ஒரு சம்பவம் பற்றியது.

தமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டமையை அடுத்து, நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அச்சமயம் வெளியிட்ட திடுக்கிடும் தகவல் அது.

கோட்டாபய ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேறிய வேளையில் நாட்டில் பெரும் அரசியல் பதற்றமும் அதிகார குழப்பமும் ஏற்பட்டன. அச்சமயத்தில் சில வெளிநாட்டுச் சக்திகளும், உள்நாட்டுத் தரப்புகளும் தம்மை நேரில் சந்தித்து அரசமைப்புக்கு முரண் என்றாலும் ஜனாதிபதிப் பதவியைத் தன்னைப் பொறுப்பேற்கும் படி அழுத்தம் தந்தார்கள் என்று சபாநாயகர் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

அரசமைப்புக்கு முரணான அரசியல் அதிகார மாற்றத்திற்கு நாட்டுக்குள் இருந்து கொண்டு சர்வதேச, உள்நாட்டுத் தரப்புகள் அழுத்தம் தருவது என்பது மிக மோசமான விடயமாகும். உள்நாட்டு விவகாரங்களில் அந்நிய சக்திகள் தலையீடு செய்யும் அப்பட்டமான அரசமைப்பு மீறல் நடவடிக்கையாகும்.

இந்த உண்மையை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் போட்டுடைத்த போது எந்த அரசியல் கட்சியும், தரப்பும் நாடாளுமன்றத்தில் இவ்விடயம் குறித்து பெரிதாகக் கேள்வி எதையும் எழுப்பவில்லை.

சபாநாயகர் வெளியிட்ட தகவல் குறித்து விசாரணை நடத்தவோ, உண்மைகளைக் கண்டறியவோ யாரும் அழுத்தம் தரவில்லை.

ஆனால், ஐந்து ஆண்டுகளுக்கு முந்தைய ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதலின் சூத்திரதாரி யார் என்பது தமக்குத் தெரியும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதும், அனேகமாக அனைத்து அரசியல் கட்சிகளும் - ஒன்று கூடத் தப்பாமல் - அந்த விடயத்தை ஒரேடியாகப் பிடித்துக் கொண்டு பிய்த்து உதறின.

தமக்குத் தெரிந்த விடயத்தை - பயங்கரவாதச் சம்பவமாக சித்திரிக்கப்படும் தொடர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி குறித்து தாம் அறிந்து கொண்டுள்ள அல்லது தெரிந்து கொண்டுள்ள தகவலை - பொலிஸாரிடம் தெரிவிக்கத் தவறியமைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கைது செய்ய வேண்டும், உடனடியாக விடயத்தை விசாரிக்க வேண்டும் என்றெல்லாம் அனைத்துக் கட்சிகளும் துள்ளிக் குதிக்கின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அரசமைப்புக்கு மாறாக - சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக - ஆட்சி அதிகாரத்தைப் பொறுப்பேற்றுமாறு சில உள்நாட்டு, வெளிநாட்டுத் தரப்புகள் தன்னை நேரில் சந்தித்து அழுத்தம் தந்தன என்று சபாநாயகர் குறிப்பிட்ட போது, இரண்டு வருடங்களாக அந்த விடயத்தைப் பற்றி பேசாமல், உண்மையை நாட்டுக்கோ, மக்களுக்கோ, நாடாளுமன்றத்துக்கோ, பொலிஸுக்கோ தெரிவிக்காமல் மறைத்த சபாநாயகர், அதற்காகக் குறைந்தபட்ச விசாரணைக்காவது நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை எந்தத் தரப்பும் வலியுறுத்தவில்லை.

அரசமைப்பு மீறலுக்கு வற்புறுத்திய தரப்புகள் பற்றிய தகவலை இரண்டு ஆண்டுகள் ஒளித்து வைத்துவிட்டு , இப்போது அதுபற்றிக் கோடி காட்டிய சபாநாயகர் மீது எதுவித நடவடிக்கையும் கோரப்படவில்லை. ஆனால் மூன்று வாரங்களுக்கு முன்னர் தெரிய வந்த விடயத்தை வெளிப்படுத்தாமைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது ஒழுங்கு நடவடிக்கை பாய வேண்டும் என்று சீறுகிறார்கள்.

நமது சமூகத்தின் இந்த இரட்டை வேட அணுகுமுறை விசித்திரமானது.

# கல்வி உதவிக்கான காசோலைகள்!




(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வலுவிழந்த பெற்றோர்களது பிள்ளைகளுக்கான கல்வி உதவிக்கான காசோலைகள் மற்றும் வலுவிழந்தோருக்கான மருத்துவ போக்குவரத்து உதவிக் கொடுப்பனவுக்கான காசோலைகள், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல். முஹம்மட் ஹனீபா தலைமையில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா, சமூக சேவை உத்தியோகத்தர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு வலஸ்முல்ல ஆஸ்பத்திரியின் குழு வருகை!

(சியாத்.எம்.இஸ்மாயில்)

வலஸ்முல்ல ஆதார வைத்தியசாலை குழுவினர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கடந்த சனிக்கிழமை (23) கள விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் மற்றும் பொறுப்பு வைத்திய உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

வைத்தியசாலை கழிவு முகாமைத்துவம் மற்றும் ஏனைய வைத்தியசாலை பிரிவுகளையும் வருகை தந்தோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.



இந்தக் களவிஜயத்தில் வலஸ்முல்ல ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ஏ.பி. ஆர்.எஸ். சந்திரசேன மற்றும் வைத்திய நிபுணர்கள், மருத்துவ அதிகாரிகள், தாதி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட முகாமைத்துவ குழுவினர் பங்கேற்றனர்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சார்பில் பொறுப்பு வைத்திய அதிகாரிகளான டாக்டர்கள் எம்.எம். தாஸிம், எஸ். அகிலன், எம்.எச்.எம். சனூபர், மற்றும் தாதிய பரிபாலகர் பி.ரி.நௌபர், நிர்வாக உத்தியோகத்தர் கே.விஜயகுமார், கணக்காளர் பி. புனிதராஜ், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இங்கு களவிஜயம் மேற்கொண்டோருக்கு வைத்திய அத்தியட்சகர் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர். இதன் போது கள விஜயத்தின் நினைவாக ஞாபகச்சின்னம் வழங்கப்பட்டது.

# பக்கீரான்வெட்டை மைதானக் காணி விவகாரம் தொடர்பில் ஆராய்வு!



(எஸ். சினீஸ் கான்)

ஆயிலியடி பக்கீரான்வெட்டை பிரதேச மக்களுடைய நீண்டகால கோரிக்கையாக இருந்த பொது விளையாட்டு மைதான காணியைப் பெற்றுக ˙கொடுப்பதற்காக திரு கோணமலை khtl;l ehlhSd;w cWg;gpdu; vk;.v]; njsgPf;> me;jg; gpuNjrj;Jf;F jpq;fl;fpoik (25) fs tp[ak; xd;iw Nkw;nfhz; lhu;.

,jd;NghJ> me;jg; gpuNjr gs;spthry; epu;thfk;> tpisahl;Lf; fof cWg;gpdu;fs; kw;Wk; fhzp cupikahsu;fSld; Ngr;R elj; jg;gl;lJ. me;jr; re;jpg;gpy; rpy Kf; fpakhd jPu;khdq;fSk; vLf;fg; gl;ld.



# காத்தான்குடி அல் அமீன் வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட நூலகம் திறந்து வைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி கல்வி கோட்டத்திலுள்ள காத்தான்குடி அல் அமீன் வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட நூலகம் (25) திங்கட்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

செலான் வங்கியின் செலான் பெஹஸர திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட 299 ஆவது நூலகமாக இந்தப் பாடசாலையின் நூலகம் திறந்து வைக்கப்பட்டது.



பாடசாலை அதிபர் திருமதி நயிமா அப்துஸ் சலாம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செலான் வங்கி உதவி முகாமையாளர் றுவான் பெர்ணான்டோ பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதில் காத்தான்குடி பிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.எம்.ஹக்கீம் உட்பட செலான் வங்கியின் அதிகாரிகள், முகாமையாளர்கள், ஆசியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது நூலகத்தின் நினைவுக் கல்லும் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இந்த நூலகத்துக்கு செலான் வங்கியால் மடிக் கணனியும் வழங்கப் பட்டது .



# சமூகமாக முன்னேற வேண்டும் என்றால் இளைஞர்கள் அறிவைப் பெருக்க வேண்டும்

## கிழக்கின் கேடயத்தின் தலைவர் சபீஸ் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர், கே எ ஹமீட்)

சமூகமாக முன்னேற வேண்டும் என்றால் இளைஞர்கள் தொடர்ச்சியாக அறிவைப் பெருக்கிக் கொள்வதோடு ஒருமைப்பாட்டுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதன் மூலம்தான் நாம் சமூகமாக முன்னேற முடியும்.

அக்கரைப்பற்று அனைத்து பள்ளி வாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயத்தின் தலைவருமான எஸ்.எம். சபீஸ் இவ்வாறு தெரிவித்தார்.



பாலமுனை பிரதேசத்தில் இருந்து கிழக்கின் கேடயத்தில் புதிய அங்கத்தவராக இணைந்து கொண்ட இளைஞர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்துரைத்த அவர்,

புத்தாக்க கல்வி அறிவை அடித்தளமாக கொண்ட சமூகமாக நாம் வளர வேண்டும். அத்துடன் ஒருமைப்பாட்டுடன் எல்லோரும் சேர்ந்து இயங்கும் முறைமைக்குள் நாம் உள்வாங்கப்படுகின்றபோது நமது சமூகம் பொருளாதார ரீதியான முன்னேற்றத்தைப் பிரசவித்துக் கொள்ளும். அந்த முறையை கொண்டு வருவதே எங்களது முதல் பணியாகும்.- என்றார்.

இந்த நிகழ்வில் உலமாக்கள், கிழக்கின் கேடயம் பொருளாளர் ஏ.எல்.ருஸ்தி அஹ்மத், கிழக்கின் கேடயத்தின் இணைப்பாளர் சட்டக் கல்லூரி மாணவன் முஹம்மட் அசாம், ஏ.கே. அமீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும், கிழக்கின் கேடயத்தின் ஆலோசகருமான சட்டமானி எஸ்.எம்.எம். ஹனீபா, செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எம்.அர்சாத் மற்றும் அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# புற்றுநோயாளர்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளது காப்போம் அமைப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு, கிழக்குப் புற்றுநோய் வைத்திய பராமரிப்பு நிலையத்தில் தங்கியிருந்து பராமரிப்பு மற்றும் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளும் புற்றுநோயாளர்களை பார்வையிட்டதுடன் அவர்களுக்கான உதவிகளையும் காப்போம் அமைப்பு வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி முரளீதரன், காப்போம் அமைப்பினர் கிழக்குப் புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்துக்குச் சென்றிருந்தனர். இதன்போது இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

காப்போம் அமைப்பு திருகோணமலையில் இருந்தாலும், நாட்டின் சகல பாகங்களிலும் இருக்கக் கூடிய தேவையுள்ள மக்களை நாடிச் சென்று மனிதாபிமான உதவிகளை வாரி வழங்கும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாக உள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.




# நீர் வழுங்கல ஊழியர் சங்கத்தின் 18ஆவது வருடாந்த மாநாடு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு ஊழியர் சங்கத்தின் 18 ஆவது வருடாந்த மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு தேசிய தொழிற்சங்க நிலையத்தின் தலைவர் தோழர் லால் காந்த மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு ஊழியர் சங்கத்தின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது. செயலாளர் எஸ்.டி. நீல் லீலா ரத்ன தோழர்களின் பங்கேற்புடன் இந்த மாநாடு நடைபெற்றது.

இதில் நாடு தழுவிய குடிநீர் வழங்கல் வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.





# வெருகல் கட்டையாறு பாலம் மக்கள் பாவனைக்குத் திறப்பு

(ஹஸ்பர்)

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட வெருகல் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கட்டையாறு பாலமானது கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனால் நேற்று முன்தினம் (25) திறந்துவைக்கப்பட்டது.



வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துகோரல, வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகஸ்தர்கள் மற்றும் பொது மக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




| | |
|---|---|
| **ROASTED CHILLI POWDER**<br>(Includes 14 spices)<br>250 G - 950/=, 100G - 395/= | **SPECIAL CUMIN SEED POWDER**<br>100G - 560/= |
| **UNROASTED CURRY POWDER**<br>250G - 850/=, 100G - 380/= | **CORIANDER POWDER**<br>100 G NEW - 190/= |
| **CHILLI POWDER**<br>100G - 290/= | **BLACK PEPPER POWDER**<br>100 G |

**FREE DELIVERY TO SPECIFIC AREAS**

**DELIVERY WILL BE CHARGED TO OTHER AREAS**

# பா.ஜ.கவுடன் தி.மு.க. கள்ளக் கூட்டணி எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டுகிறார்

"நாட்டை பற்றி தெரியாத பொம்மை முதல்வர் ஸ்டாலின். கள்ளக்கூட்டணிக்கு சொந்தக்காரர்கள் தி.மு.கவினர். தி.மு.கதான் பா.ஜ.கவுடன் கள்ளக் கூட்டணி வைத்துள்ளது. ஆனால் நம் மீது குற்றஞ்சாட்டுகிறார் ஸ்டாலின்."

– இவ்வாறு திருநெல்வேலியில் நடந்த பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தி.மு.க. குடும்ப ஆட்சி. அந்த கட்சி வெற்றிபெற்றால் நாட்டை யாராலும் காப்பாற்ற முடியாது. சாதாரண தொண்டனும் அதிமுகவில் பொது செயலராக முடியும். திமுகவில் முடியுமா?. அ.தி.மு.க. மீது வழக்கு பதிவு செய்துவிட்டால் அதிமுகவை ஒழிக்க முடியுமா?. பகல் கனவு காண்கிறார் ஸ்டாலின். திறனற்ற முதல்வராக இருக்கிறார். நாட்டை பற்றி தெரியாத பொம்மை முதல்வர். கள்ளக்கூட்டணிக்கு சொந்தக்காரர்கள் தி.மு.கவினர். தி.மு.கதான் கள்ளக்கூட்டணி வைத்துள்ளது. ஆனால் நம் மீது குற்றஞ்சாட்டுகிறார் ஸ்டாலின். நடிப்பில் திறமையானவர்.

அமைச்சராக இருக்கும் உதயநிதி என்ன பேசுவது என்று தெரியாமல் பேசுகிறார். சிரித்தால் பல்தான் தெரியும். பிரதமரிடம் பேசும்போது நீங்கள்தான் பல்லை காட்டியுள்ளீர்கள். யாருக்கும் நாங்கள் அடிமை இல்லை. பா.ஜ.கவுடன் பிரிந்து வந்துவிட்ட பின்னரும் அதை ஸ்டாலின் கொச்சைப்படுத்தி பேசுகிறார்.




3 ஆண்டுகாலம் நாட்டை குட்டிச்சுவராக்கிவிட்டார். எங்கு பார்த்தாலும் போதைப்பொருள் நடமாட்டம். வெளிநாடுகளுக்கு போதை பொருள் கடத்திய நபரோடு ஸ்டாலினுக்கும், உதயநிதிக்கும் என்ன தொடர்பு. 2026 இல் அ.தி.மு.க. ஆட்சி அமையும். அப்போது இதற்கெல்லாம் பதில் சொல்லப்படும்.

திமுக குடும்ப ஆட்சி. அந்த கட்சி வெற்றிபெற்றால் நாட்டை யாராலும் காப்பாற்ற முடியாது. சாதாரண தொண்டனும் அதிமுகவில் பொதுசெயலராக முடியும். திமுகவில் முடியுமா?. அதிமுக மீது வழக்கு பதிவு செய்துவிட்டால் அதிமுகவை ஒழிக்க முடியுமா?. பகல் கனவு காண்கிறார் ஸ்டாலின். திறனற்ற முதல்வராக இருக்கிறார். நாட்டை பற்றி தெரியாத பொம்மை முதல்வர். கள்ளக்கூட்டணிக்கு சொந்தக்காரர்கள் திமுகவினர். திமுகதான் கள்ளக்கூட்டணி வைத்துள்ளது. ஆனால் நம் மீது குற்றஞ்சாட்டுகிறார் ஸ்டாலின். நடிப்பில் திறமையானவர்.

அமைச்சராக இருக்கும் உதயநிதி என்ன பேசுவது என்று தெரியாமல் பேசுகிறார். சிரித்தால் பல்தான் தெரியும். பிரதமரிடம் பேசும்போது நீங்கள்தான் பல்லை காட்டியுள்ளீர்கள். யாருக்கும் நாங்கள் அடிமை இல்லை. பா.ஜ.கவுடன் பிரிந்து வந்துவிட்ட பின்னரும் அதை ஸ்டாலின் கொச்சைப்படுத்தி பேசுகிறார்.

3 ஆண்டுகாலம் நாட்டை குட்டிச்சுவராக்கிவிட்டார். எங்கு பார்த்தாலும் போதைப்பொருள் நடமாட்டம். வெளிநாடுகளுக்கு போதை பொருள் கடத்திய நபரோடு ஸ்டாலினுக்கும், உதயநிதிக்கும் என்ன தொடர்பு. 2026 இல் அ.தி.மு.க. ஆட்சி அமையும். அப்போது இதற்கெல்லாம் பதில் சொல்லப்படும்." – என்றார்.

# தி.மு.கவின் தேர்தல் அறிக்கை பொய்கள் அடங்கிய புத்தகம்

## அண்ணாமலை தெரிவிப்பு

முழு பொய்கள் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டு தேர்தல் அறிக்கை என்கின்றனர் என தி.மு.க. தேர்தல் அறிக்கை குறித்து அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கரூர் – கோவை சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கரூர் மக்களவைத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. பா.ஜ.க. மாவட்டத் தலைவரும், கரூர் மக்களவைத் தொகுதி வேட்பாளருமான வி.வி.செந்தில்நாதன் தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக பா.ஜ.க. மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை பங்கேற்று வேட்பாளர் செந்தில்நாதனை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றுகையில்,

"தமிழகத்தில் குடும்ப ஆட்சி நடைபெறுகிறது. பெரம்பலூர் மக்களவை வேட்பாளராக அமைச்சர் நேரு மகன் போட்டியிடுகிறார். துரைமுருகன் மகன், தென் சென்னையில் அமைச்சர் தங்கம் தென்னரசுவின் சகோதரி, மத்திய சென்னையில் தயாநிதி மாறன், வடசென்னையில் ஆற்காடு வீராசாமி மகன் போட்டியிடுகிறார்.

எதையும் செய்யாமல் தந்தையின் பெயரை இனிஷியலாக வைத்துக் கொண்டு தேர்தலை சந்திக்கின்றனர். பா.ஜ.க. வேட்பாளர் செந்தில்நாதன் உங்களில் ஒருவர்.

தி.மு.க, அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையுடன் சுற்றிக்கொண்டு உள்ளனர். 2021 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் உள்ள விஷயங்களே இதிலும் உள்ளன. சட்டப்பேரவை தேர்தலுக்கு அடித்துவிட்டு மக்களவை தேர்தல் எனவும், 2021 என்பதை 2024 எனவும், பெட்ரோல், டீசல், கேஸ் விலை குறைப்பில் குறிப்பிட்டுள்ள தொகைகளை மாற்றி வழங்கி வருகின்றனர். முழு பொய்கள் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டு தேர்தல் அறிக்கை என்கின்றனர்." – என்றார்.






# மோடி ஆட்சியில் தமிழக மீனவர்கள் மீது அறிவிப்படாத போர் இடம்பெறுகின்றது

## முதல்வர் ஸ்டாலின் தூத்துக்குடியில் உரை

“தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கையின் அராஜகங்கள், கைதுகள் அளவில்லாமல் போனது பா.ஜ.க. ஆட்சியில்தானே. இல்லையென்று ஆதாரபூர்வமாக மறுக்க முடியுமா? விஸ்வகுரு என்று விளம்பரப்படுத்திக் கொள்ளும் நீங்கள், தமிழக மீனவர்களைக் காப்பாற்ற ஒரு துரும்பையும் எடுத்துப் போடவில்லையே? எந்த முகத்தை வைத்துக் கொண்டு தமிழக மீனவர்களிடம் ஓட்டு கேட்டு வருகிறீர்கள்?”

– இவ்வாறு தூத்துக்குடியில் நடந்த தி.மு.க. பிரச்சாரக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

தூத்துக்குடி மக்களவைத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் கனிமொழி மற்றும் இராமநாதபுரம் மக்களவைத் தொகுதி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வெற்றி வேட்பாளர் நவாஸ் கனி ஆகியோரை ஆதரித்து தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில்,

“நாங்கள் குடும்பக் கட்சிதான். தமிழகத்தில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் நன்மை செய்கின்ற கட்சி. ஒவ்வொரு நாளும் காலை முதல் இரவு வரை மக்களுடன் மக்களாக இருந்து, மக்களுக்காகப் பணியாற்றிக் கொண்டு இருக்கும் கட்சி.

‘நான் ஆட்சிக்கு வந்தால், ஒரு மீனவர்கூட தாக்கப்பட மாட்டார் கைது செய்யப்பட மாட்டார்’ என்று மார்தட்டினாரே மோடி? ஆனால், வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, இராமநாதபுரம் – தூத்துக்குடி என்று பல்வேறு மாவட்ட மீனவர்களுக்குச் சிறைத் தண்டனை, படகுகள் பறிமுதல், படகுகள் நாட்டுடைமை, கடும் அபராதம், மூன்றாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது என்று, தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படை அறிவிக்கப்படாத ஒரு போரை நடத்துவது மோடி ஆட்சியில்தான்.

‘நான் ஆட்சிக்கு வந்தால், ஒரு மீனவர்கூட தாக்கப்பட மாட்டார் கைது செய்யப்பட மாட்டார்’ என்று மார்தட்டினாரே மோடி? ஆனால், வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, ராமநாதபுரம் – தூத்துக்குடி என்று பல்வேறு மாவட்ட மீனவர்களுக்குச் சிறைத் தண்டனை, படகுகள் பறிமுதல், படகுகள் நாட்டுடைமை, கடும் அபராதம், மூன்றாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது என்று, தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படை அறிவிக்கப்படாத ஒரு போரை நடத்துவது மோடி ஆட்சியில்தான்.

இதையெல்லாம் வேடிக்கை பார்ப்பது யார்? தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களைத் தட்டிக் கேட்க நீங்கள் தயங்குவது ஏன்? பாதிக்கப்படுவது தமிழக மீனவர்கள் என்பதாலா? கதறி அழுவது தமிழக பெண்கள் என்பதாலா? குஜராத் மீனவர்கள்மீது பாகிஸ்தான் துப்பாக்கிச் சூடு நடத்தினால், சிறையில் அடைத்தால், படகுகளை நாட்டுடைமை ஆக்கினால் இப்படிதான் அமைதியாக இருப்பீர்களா? நீங்கள்தான் பெரிய விஸ்வகுருவாயிற்றே, இலங்கையை உங்களால் கண்டிக்க முடியாதா? நீங்கள் விஸ்வகுருவா? இல்லை மவுனகுருவா? பதில் கூறுங்கள் மோடி. பதில் கூறுங்கள் என்று நான் மட்டும் கேட்கவில்லை. தூத்துக்குடி – ராமேஸ்வரம் மீனவர்கள் மட்டும் கேட்கவில்லை. ஒட்டுமொத்தத் தமிழக மீனவர்களும் கேட்கிறார்கள்.” – என்றார்.





# பாகிஸ்தான் வடமேற்கு பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைப் படை தாக்குதலில் 5 சீனர்கள் பலி

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் நேற்று நடந்த தற்கொலைப் படை தாக்குதலில் சீனாவைச் சேர்ந்த ஐவர் பலியாகியுள்ளனர்.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்கவா மாகாணத்தில் உள்ள தசு முகாமுக்கு சீன பொறியாளர்கள் சென்று கொண்டிருந்த வாகனத்தின் மீது தற்கொலை படையைச் சேர்ந்தவர் மோதி வெடிக்கச் செய்ததில் வாகனத்தில் இருந்த ஐந்து பேரும் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் பெல்ட் அண்ட் ரோடு திட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக கைபர் பக்துன்கவா பகுதியில் சீனப் பொறியாளர்கள் பாகிஸ்தான் தொழிலாளர்களைக் கொண்டு பல்வேறு கட்டுமானப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் தசு என்ற இடத்தில் அணை கட்டும் திட்டம் நடந்து வருகிறது. இதனைக் குறிவைத்து பலமுறை தீவிரவாதத் தாக்குதல்கள் நடந்துள்ளன.

இந்த நிலையில், நேற்று நடந்த தாக்குதலில் சீனாவைச் சேர்ந்த ஐந்து பொறியாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதேபோல் கடந்த 2021 ஆம் ஆண்டு தசுவில் நடந்த தாக்குதலில் 9 சீனர்கள் கொல்லப்பட்டனர். அப்போதும் இதேபோல் சீனர்கள் சென்ற பேருந்து மீது தற்கொலைப் படையைச் சேர்ந்தவர் மோதி தாக்குதல் நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 500 பெரும் பணக்காரர்கள் பட்டியலில் டொனால்ட் ட்ரம்ப் இடம் பிடித்தார்

உலகத்தின் 500 பெரும் பணக்காரர்கள் பட்டியலில் முதன் முறையாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இடம் பிடித்துள்ளார்.

புளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின்படி, 6.5 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் முதல் முறையாக டொனால்ட் ட்ரம்ப் உலக பணக்காரர்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ளார்.

இந்த ஆண்டு நவம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிட உள்ளார்.

இந்த நிலையில் அவர் மீதான குற்றவழக்குகளின் விசாரணையும் முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது, அதன்படி ட்ரம்ப் மீதான நிதி மோசடி வழக்கில், சுமார் 500 மில்லியன் டொலர் உறுதித் தொகையை கட்ட நியூயோர்க் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.






இது தொடர்பான மேன்முறையீட்டு வழக்கில் இந்தத் தொகை 175 மில்லியன் டொலர்களாக குறைக்கப்பட்டது. இந்த சூழலிலேயே பங்குச்சந்தையில் ட்ரம்ப்புக்கு சொந்தமான நிறுவனங்களின் மதிப்பு கணிசமாக குறையும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், ட்ரம்ப்புக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான பங்குகளின் மதிப்பு உச்சத்தை எட்டியுள்ளதாகவும், அவரது நிகர மதிப்பு மொத்தமாக 4 பில்லியன் டொலருக்கும் அதிகமாக அதிகரித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சர்ச்சைகளுக்குள் அகப்பட்டுள்ள நிலையில், தற்போது ட்ரம்ப் உலக பணக்காரர்களின் பட்டியலில் இடம் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# இஸ்ரேலை கைவிட்டது அமெரிக்கா அதிர்ச்சியில் பிரதமர் நெதன்யாகு

ஐ.நா.வில் போர் நிறுத்த தீர்மானத்துக்கான வாக்கெடுப்பில் அமெரிக்கா வாக்களிக்காமல் போனதை தொடர்ந்து அமெரிக்கா, இஸ்ரேலை கைவிட்டதாக பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

உலக நாடுகள் பலவும் வலியுறுத்திவந்த நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் இருந்த போர் நிறுத்தத் தீர்மானம் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

அதில், அமெரிக்காவை தவிர யு.என்.எஸ்.சி-ல் மொத்தமுள்ள 15 நாடுகளில் 12 நாடுகளின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



இந்த நிலையில், அமெரிக்கா தனது கொள்கையை நேற்று நடந்த ஐநா வாக்கெடுப்பின்போது கைவிட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

சில நாள்களுக்கு முன்பு பிணைக் கைதிகள் விடுதலை தொடர்புடைய பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானத்தை அமெரிக்கா வரவேற்றது. சீனா மற்றும் ரஷ்யா அதனை வீட்டோ அதிகாரம் கொண்டு தடுத்தன.

அத்தோடு, போரின் ஆரம்பம் முதல் அமெரிக்கா கொண்டிருந்த நிலைப்பாட்டில் இருந்து விலகியதை இது தெளிவாக உணர்த்துகிறதாகவும் இஸ்ரேல் சுட்டிக்காட்டியுள்ளது.

# அமெரிக்காவின் புளோரிடாவில் சமூக ஊடகங்களுக்கு வரையறை

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் சமூக ஊடகங்களுக்கு தடை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான சட்டத்தில் மாநில ஆளுநர் கையெழுத்திட்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, புளோரிடா மாநிலத்தில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக வலைதளங்களில் கணக்கு வைத்திருப்பது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடக கணக்குகளை நீக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.



பக்கங்கள் 04

கனடா முரசு

புதன்கிழமை 27/03/2024

## குற்றக் கும்பலின் 13 நபர்கள் மொன்றியல் தேடுதலில் கைது

கியூபெக், மார்ச்27

மொன்றியல் நகரில் சர்ச்சைக்குரிய குற்றவாளிகள் குழுவினரைத் தேடி நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது C2▶




# போலித் தகவல்களைச் சமர்ப்பித்து அரச வருமான நிதி பெற்ற 200 பேர்

## கொவிட் கால குளறுபடி அம்பலத்துக்கு

**ஒன்ராரியோ,மார்ச்27**

**கொவிட்-19 காலப்பகுதியில் போலியான வகையில் மத்திய அரசாங்கத்தின் வருமான நிதியைப் பெற்றமைக்காக சுமார் 200 பேரை கனடியே வருமான வரி நிறுவனம் வேலைநீக்கம் செய் துள்ளது.**

**கனடாவின் அவசரகால உதவி நிதிக்கு பொருத்தமற்ற வகையில் விண்ணப் பித்து, பெற்றுக்கொண்ட 232 பேரை, மார்ச் 15ஆம் திகதி வரை வேலை நீக் கம் செய் துள்ளதாக வருமான வரி நிறுவனம் தெரி வித்துள்ளது.**

C2▶

# கனடியத் தமிழர் பேரவை நடத்திய சிறப்பான மகளிர் தின நிகழ்வுகள்

ஒன்ராரியோ, மார்ச் 27 – கனடியத் தமிழர் பேரவையின் மகளிர் தின கொண்டாட்டங்கள் கடந்த ஞாயிறு (மார்ச் 24ஆம் திகதியன்று) இடம்பெற்றன.

கனடாவில் உள்ள தமிழ் சமூகத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் பெண்களின் குறிப்பிடத்தக்க சாதனைகள் மற்றும் பங்களிப்புகளைக் கொண்டாடும் வகையில் இந்நிகழ்வு அமைந்திருந்ததாக கனடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் கொண்டாட்டத்தின் கருப்பொருளை எதிரொலிக்கும் வகையில், சமூகத்தில் உள்ள பலதரப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் கலாசார நடன நிகழ்ச்சிகளும் இந்த நிகழ்வின் போது ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன.

வசந்தி அழகுசாதனப் பொருள்களின் நிறுவனர் பிங்கி கோசல் மற்றும் நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கான மருத்துவமனையின் மருத்துவப் பயன்பாடுகளின் இயக்குநர் நிண்டு குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டமையோடு அவர்களின் வெற்றிக்கான பாதையைப்பற்றியும் வந்திருந்தவர்களிடம் பகிர்ந்துகொண்டனர்.

'மேட் இன் முல்லைத்தீவு' முயற்சியானது அதன் இரண்டாம் கட்டத்திற்கு நகர்வது தொடர்பான அறிவிப்பு இந்த நிகழ்வின் குறிப்பிடத்தக்க C2▶

# ஒன்ராறியோ வரவு - செலவுத் திட்டத்தில் வாகனக் காப்புறுதி சீர்திருத்தங்கள் வரும்

ஒன்ராரியோ,மார்ச் 27

ஒன்றாறியோ அரசாங்கம் அதன் 2024 மாகாண வரவு – செலவுத்திட்டத்தின் ஒரு பகுதியாக 'வாகனக் காப்புறுதிச் சீர்திருத்தங்களுடன்' முன்னேறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இது குறித்து மிகக் குறைவான விவரங்களே வெளியிடப்பட்டுள்ளன.

ஆனால் பணியிட சுகாதாரத் திட்டங்களுடன் நகல் எடுப்பதைத் தவிர்த்தல், மேலும் ஒன்டாரியோவைச் சேர்ந்த



வர்களுக்கு கூடுதல் விருப்பங்களை வழங்குவதே இந்த யோசனையாகும் எனக் கருதப்படுகின்றது.

உடல்நலம் மற்றும் தனிப்பட்ட காயத்தை உள்ளடக்கிய கட்டாய வாகன காப்புறுதியை சாரதிகள் தொடர்ந்து செலுத்துவார்கள். அதன் பிறகு, சட்டப்பூர்வ விபத்துப் பயன் அட்டவணையின் கீழ் பட்டிய லிடப்பட்டுள்ள பிற விருப்பப் பலன்க ளைத் தேர்வு செய்வது அல்லது வெளி யேறுவது சாரதியின் விருப்பமாக இருக்கும்.

இதில் சொத்து சேதம், இறப்பு பலன்கள், பார்வையாளர்களுக்கான செலவுகள், வருமான மாற்று பலன்கள் மற்றும் வீட்டு பராமரிப்பு பலன்கள் ஆகியவை அடங்கும்.




## குற்றக் கும்பலின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சுமார் 20 வர்த்தக இடங்கள், வீடுகள் மற்றும் வாகனங்கள் இதன்போது நீதிமன்ற அனுமதியுடன் தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டன எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

போதைப் பொருள் கடத்தல், போலி நாணயத்ததாள் மற்றும் சட்டவிரோத சூதாட்டம் போன்ற குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டுள்ள கும்பலை இலக்கு வைத்தே இந்தத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.கைதுசெய்யப்பட்டவர்களில் ஒன்பது ஆண்களும், நான்கு பெண்களும் உள்ள டங்குகின்றனர் அத் தெரிவிக்கப்படுகின்றது.

## கனடியத் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பம்சமாகும். முல்லைத்தீவில் ஒரு காட்சியறை திறக்கப்படவுள்ளமை தொடர்பான முயற்சிகள் குறித்துப் பங்கேற்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது. 'மேட் இன் முல்லைத்தீவு' காட்சியறை, பொருளாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான ஒரு படி மட்டு மல்லாது, பெண்கள் நிதி சுதந்திரத்தையும் வலிமையையும் அடையக்கூடிய சமூக சூழலை வளர்ப்பதாகவும் அமையும். இந்தக் காட்சியறை எதிர்வரும் மாதங்களில் ஸ்தாபிக்கப்படவுள்ளதுடன், முல்லைத்தீவு நகரின் மையப்பகுதியில் அதன் புதிய பஸ் நிலைய வளாகத்தில் அமையவுள்ளதாகவும், அதிக எண்ணிக்கையிலான உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு ஆதரவளிக்கும் இந்த காட்சியறைக்கு நிதியளிக்க கனடியத் தமிழர் பேரவை உறுதியளித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

2024 கனடிய தமிழர் பேரவை மகளிர் தலைமைத்துவ விருது கடந்த 40 ஆண்டுகளாக சிறந்த பங்களிப்பு மற்றும் தலைமைத்துவத்துடன் செயற்பட்ட மணிபத்மராஜாவை பாராட்டி வழங்கப்பட்டது. தமிழ் அகதிகளின் வீட்டுத் தேவைகளுக்கு உதவுவதற்காக செனோர் தமிழ் மையத்தை உருவாக்குவதற்கும், தமிழ் கூட்டுறவு கட்டடத்தை நிறுவுவதற்கும் மணி பத்மராஜா குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளார்.

இந்த நிகழ்வின்போது காலஞ்சென்ற திருமதி சத்தியஜோதி செல்வகோனுக்கு வாழ்நாள் முழுவதும் தமிழ் சமூகத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது.

பாலின சமத்துவத்திற்காக வாதிடுவதற்கும், பெண்களின் தலைமையை ஆதரிப்பதற்கும், ஒவ்வொரு பெண்ணின் பங்களிப்பும் மதிக்கப்படும் மற்றும் கொண்டாடப்படும் சமூகத்தை வளர்ப்பதற்கும் கனடிய தமிழர் பேரவை அர்ப்பணிப்புடன் செயற்படும் என்பதற்கு இந்த நிகழ்வும் ஒரு சான்றாக அமைந்திருந்ததாக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## போலித்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கடந்த டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடும் போது, 47 பேர் புதிதாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெருந்தொற்றுக் காலத்தின் போது தமது தொழிலை இழந்த கனடியர்களுக்கு மாதாந்தம் 2,000 டொலர்கள் மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் இந்த பணத்தை மீள அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டும்.

இந்த நிலையில், வருமான வரி நிறுவனத்தில் பணியாற்றும் 600 பேருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், அனைவரும் வேலைநீக்கத்திற்கான ஆபத்தினை எதிர்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் 133 பேர் முறையான வகையில் உண்மையான தகவல்களை வெளிப்படுத்தி இந்த நிதியைப் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளதாக கனடிய வருமான வரி நிறுவனம் தெரிவித்துள்ளது.



# சசகெச்சுவானின் புறநகர்ப் பகுதியில் ஒரே குடும்பத்தில் 4 பேரின் சடலங்கள்

## கண்டெடுக்கப்பட்டன என அதிர்ச்சித் தகவல்

சசகெச்சுவானின் புறநகர்ப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட நான்கு சடலங்களும் ஒரே குடும்பத்தினருடையவை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெற்றோர்கள் மற்றும் இரண்டு பிள்ளைகளே உயிரிழந்தவர்கள் என அடையாளங் காணப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சுசகெச்சுவானின், ரெஜினாவில் கிழக்கே 130 கிலோமீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ள வீடொன்றில் விசாரணைக்குச் சென்றபோதே பொலிஸார் இந்தச் சடலங்களை கண்டுள்ளனர்.

இந்த உயிரிழப்புக்கள் தொடர்பில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்துள்ள பொலிஸார், அது குறித்து மேலதிக விவரங்கள் வெளியிடவில்லை. சுமார் 200 பேர் வரையில் வாழும் இந்தச் சமுதாயத்தில் உள்ளவர்கள் தாங்கள் சம்பவம் தொடர்பில் அதிர்ச்சிய டைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.




# உயர் பாதுகாப்பு ஆய்வகப் பணியாளர்களின் சீனத் தொடர்புகள் குறித்து விசாரிக்க முடிவு

ஒன்ராரியோ,மார்ச்27

சீனாவுடனான பரிவர்த்தனைகளில் இரண்டு விஞ்ஞானிகள் தங்கள் வேலையை இழந்தமையையடுத்து, அந்த உயர்-பாதுகாப்பு ஆய்வகம் பற்றி ஆராய்வதற்கு கனடிய நாடாளுமன்றம் திட்டமிட்டுள்ளது.

பல ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த விடயம்தொடர்பில் பல்வேறு அரசியல் பிரதிநிதிகளை விசாரிக்க கனடா-சீனா உறவுகளுக்கான சிறப்புக் குழு முடிவு செய்துள்ளது.

தேசிய நுண்ணுயிரியல் ஆய்வக ஆராய்ச்சியாளர்கள் 2021ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

அவர்களின் விசுவாசம் மற்றும் சீனாவின் வற்புறுத்தலுக்கான சாத்தியக்கூறுகள் குறித்த கேள்விகள் காரணமாக அவர்களின் பாதுகாப்பு அனுமதிகள் இரத்து செய்யப்பட்டன.

கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பதிவுகள், விஞ்ஞானிகள், சீன அரசு நிறுவனங்களுடன் வைத்திருந்த தொடர்பை வெளிப்படுத்துவனவாக இருந்தன. மே 2019 இல் தொடங்கிய இந்த விடயம் குறித்து தேசிய பாதுகாப்பு விசாரணைகள் நடந்து வருவதாக கனடிய பொலிஸார் அண்மையில் தெரிவித்திருந்தனர்.

# பாலஸ்தீனியர்களுக்கான நிவாரண நிறுவனத்திற்கு தொடர்ந்து உதவ கனடாவிடம் ஐ.நா. கோரிக்கை

ஒன்ராறியோ,மார்ச்22

பாலஸ்தீனியர்களுக்கான ஐ.நா. நிவாரண நிறுவனத்திற்கு தொடர்ந்து நிதியுதவி செய்யுமாறு ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதர் கடந்த மாதம் கனடாவிடம் வேண்டுகோள் விடுத்தார் என சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் அஹமட் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட கடும் தாக்குதல்களைத் தொடர்ந்து காஸாநிவாரண அமைப்புக்கான நிதியுதவியை ஜனவரி மாதம் முதல் முடக்கிய 16 நாடுகளில் கனடாவும் ஒன்றாகும்.

ஆனால் இந்த மாத தொடக்கத்தில், கனடாவின் குற்றச்சாட்டுகள் குறித்த இடைக்கால அறிக்கையை ஆராய்ந்ததன் பின்னர், காஸாவுக்கான ஐ.நா. நிவாரணம் மற்றும் வேலை முகமைக்கு திட்டமிடப்பட்ட தொகையை ஒட்டாவா தொடரும் என்று ஹுசைன் அறிவித்தார்.

ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவரான லிண்டா தாமஸ் கிரீன்ஃபீல்டுடன் ஹுசைன் சந்தித்து இரண்டு வாரங்களுக்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.






# பிரபலமான நுகர்வோர் பொருள்கள் கியூபெக் சந்தையிலிருந்து மறையும்?

கியூபெக்,மார்ச்27

கியூபெக் முழுவதும் உள்ள கடைகளில் இருந்து பிரபலமான நுகர்வோர் பொருள்கள் மறைந்துவிடும் அபாயம் உள்ளதாகவும், மீதமிருப்பவை அதிக விலைக்கு விற்கப்படும் எனவும் ஆயிரக் கணக்கான வெளிநாட்டு வணிகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சங்கம் கூறுகிறது.

மாநித்தின் புதிய பிரெஞ்சு மொழி சீர்திருத்தமே இதற்கான காரணம் என அந்த சங்கம் தெரிவிக்கின்றது.

வரைவு விதிமுறைகளின் பயன்பாட்டைச் சுற்றியுள்ள செலவுகள் மற்றும் சிரமங்கள் சில உற்பத்தியாளர்களை கியூபெக் சந்தையில் இருந்து வெளியேற்றக்கூடும் என்று சர்வதேச வர்த்தக முத்திரை சங்கம் தெரிவித்துள்ளது.

கியூபெக் சந்தையில் இருப்பது உண்மையில் பொருத்தமானதா என்ற கேள்வியை நிறுவனங்கள் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும். சில நிறுவனங்கள், தங்கள் தயாரிப்புகளை மாநிலத்திலிருந்து அகற்றுவது நல்லது என்று முடிவு செய்யலாம், இதனால் நுகர்வோர் குறைந்த தேர்வை விட்டுவிடுவார்கள்' என அந்த சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மே 2022 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சட்டமூலம் 96ஆனது, கியூபெக்கின் பொருளாதாரத்தின் பல துறைகளில் பிரெஞ்சு மொழித் தேவைகளை வலுப்படுத்துகிறது.

# பல பில்லியன் டொலர்கள் சுகாதாரத்திற்கு ஒன்ராறியோ வரவு - செலவுத் திட்டத்தில்!

ஒன்ராறியோ,மார்ச் 27

எதிர்வரும் வரவு – செலவுத் திட்டத்தில் பல பில்லியன் டொலர்களை சுகாதாரத்திற்காக ஒன்ராறியோ மாநிலம் ஒதுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டு பராமரிப்பு சேவைகளுக்கு 2 பில்லியன்கள் டொலர்கள் வரையிலும், வைத்தியசாலைகளுக்கு 1 பில்லியன் டொலரும், முதன்மை பராமரிப்புக்கு பல நூறு மில்லியன்களையும் முதலீடு செய்யவுள்ளதாக மாநில அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய மற்றும் எதிர்காலத் தலைமுறையினரிற்கு வலுவான சுகாதார கட்டமைப்பு ஒன்றை பேணுவது தொடர்பில் தமது அரசாங்கம் மீது ஒன்ராறியோ மக்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றனர் என மாநில நிதியமைச்சர் பீட்டர் பெத்லென்பெல்வி தெரிவித்துள்ளார்.